குடிசைமாற்று வாரியத்தின் மூலமாக விரைவாக எவ்வளவு காலத்திற்குள் அவர்களுக்கு பாதுகாப்பான நிலையை உருவாக்கித் தருவதற்கு அரசு ஆவன செய்யும் என்பதை அறியவிரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது வாரியத்தின் வாயிலாக நிலம் கையகப்படுத்தப்பட்டு இருக்கிற காரணத்தால், இந்த நிதி ஆண்டிலே அந்தத் திட்டத்திற்கான பணிகளை வாரியம் துவங்கும் என்பனதத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 238, திரு. தி. சாத்தையா, இருக்கையில் இல்லை, திரு. ஜெ. பாலகங்காதரன், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்.

238—

இராஜபாளையத்தில் ஆதிதிராவிடர் சமுதாயக் கூடம்

*10442—திரு. தி. சாத்தையா: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராஜபாளையத்தில் ஆதி திராவிடர்களுக்கு சமுதாயக்கூடம் கட்டித் தரும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டிக் கொடுக்கப்படும்?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சமுதாயக் கூடம், நிதி வசதி மற்றும் தேவை ஆகியவற்றின் அடிப்படையில் வரும் ஆண்டுகளில் பரிசீலனை செய்யப்படும்.

திரு. ஜெ. பாலகங்காதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ராஜபாளையத்தைப் பொறுத்தமட்டிலும் அதிக அளவில் ஆதி திராவிடர்கள் இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் வறுமைக் கோட்டிற்குக் கீழே வசிக்கிறார்கள். எனவே, அவர்கள் திருமணம் மற்றும் சில சுப காரியங்களுக்கு மற்ற திருமண மண்டபங்களை அணுகிச் செல்கிறபோது, அதிகமான அளவில் பணம் செலவழிக்க வேண்டியதாக இருக்கிறது. இது அவர்களால் முடியாத காரணத்தால், இந்தத் திட்டத்தை இந்த ஆண்டே ராஜபாளையத்தைப் பொறுத்தமட்டிலும் செயல்படுத்த முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

1993 ஏப்ரல் 2]

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன் அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப் பெறுகிறது.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் அதிகமான அளவில் கோரிக்கைகள் வருகின்றன. அந்தக் கோரிக்கையின் அடிப்படையில் முன்னுரிமையாக இதை எடுத்துக் கொள்வதற்கு அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வே. கோபாலகிருஷ்ணன்.

திரு. வே. கோபாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்ட மக்களின் ரட்சகராக விளங்குகின்ற புரட்சித் தலைவியினுடைய கருணைமிக்க ஆட்சியில் இன்று தாழ்த்தப்பட்ட மக்களுக்கு சட்டத்தின் மூலம் சரணாலயம் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த நல்ல வேளையில் ஆதி திராவிட மக்களுக்குக் கட்டிக் கொடுக்கப்படுகின்ற சமுதாய நலக் கூடங்களின் எண்ணிக்கை தென் மாவட்டங்களுக்கு மிகக் குறைவாக உள்ளதாக அம்மாவட்ட ஆதி திராவிட மக்கள் கூறுகின்றார்களே, அதுபற்றி ஆதி திராவிட நலத் துறை அமைச்சர் அறிவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சமுதாய நலக் கூடங்களை கோரிக்கையின் அடிப்படையில் பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம். இதுவரையில் 159 சமுதாய கூடங்களுக்கு ஆணையிடப்பட்டு 149 சமுதாயக் கூடங்கள் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன. 10 சமுதாயக் கூடங்கள் கட்டப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 239. திரு. எம். பூராசாமி, இருக்கையில் இல்லை. திரு. எஸ். ஆசைமணி, மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர்.